**Starting time 12.23 P.M.**

**<u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 109/2011**

Deposition of **<u>P.W.1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 04.08.2023 in accordance with the provision of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : வெற்றி | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

<u>**1**-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u> நான் இவ்வழக்கில் 2-வது வாதி என்றால், ஆமாம். 23.10.2007 தேதியன்று 1-ம் பிரதிவாதியின் சகோதரர் ராஜேந்திரன் என்பவருடன் நான் A அட்டவணைச் சொத்தைப் பொறுத்து பரிவர்த்தனைப் பத்திரம் ஏற்படுத்திக் கொண்டேன் என்றால், ஆமாம். 21.04.2004 தேதியிட்ட பாகப்பிரிவினைப் பத்திரத்திம் மூலம் ராஜேந்திரனுக்கு E அட்டவணைச் சொத்து பாகமாக ஒத்துக்கப்பட்டது என்றால், ஆமாம். அந்த E அட்டவணைச் சொத்தைதான் தாவாவில் A அட்டவணைச் சொத்ததாகக் காட்டியுள்ளோம் என்றால், ஆமாம். 1-ம் பிரதிவாதி அவருடைய சொத்தை 3-ம் பிரதிவாதிக்கு விற்றுவிட்டார் என்றால், ஆமாம். 21.04.2004 தேதியிட்ட பாகப் பிரிவினைப் பத்திரம் மூலம் 1-ம் பிரதிவாதிக்கு B அட்டவணைச் சொத்து ஒதுக்கப்பட்டது என்றால், ஆமாம். 3-ம் பிரதிவாதி D அட்டவணைச் சொத்தை விற்றுவிட்டார் என்றால், ஆமாம்.

2. 3-ம் பிரதிவாதியிடமிருந்து D அட்டவணைச் சொத்தை 4-ம் பிரதிவாதி கிரயம்

பெற்றுள்ளார் என்றால், ஆமாம். 4-ம் பிரதிவாதி தற்பொழுது அனுபவித்து வரும் சொத்துதான் 1-ம் பிரதிவாதிக்குப் பாகமாகப் பிரிந்த சொத்து என்றால், ஆமாம். வழக்கில் 2, 3 அயிட்ட சொத்துக்களாக நான் காட்டியுள்ளவை என்னுடைய பூர்வீக சொத்துக்கள் என்றால், ஆமாம். என் பெயரிலும், என் தகப்பனார் பெயரிலும் 1-ம் பிரதிவாதி அ.வ. எண் 123/2011 வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்றால், ஆமாம். அந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் வந்து வழக்கு இடத்தைப் பார்வையிட்டார் என்றால், இல்லை. நீதிமன்ற ஆணையர் தடத்தை நாங்கள் மறிப்பதும் சம்பந்தமாக வந்து பார்வையிட்டபோது நானும், என் தகப்பனாரும் உடன் இருந்தோம் என்றால், இல்லை. நான் ராஜேந்திரனிடமிருந்து பரிவர்த்தனைப் பத்திரம் மூலம் பெற்ற சொத்தில் மின் இணைப்பு எண் 15-ல் ஒரு கிணறு உள்ளது என்றாலும், அது எனக்கு பாத்தியப்பட்டது என்றாலும், ஆமாம். 4-ம் பிரதிவாதி கிரயம் பெற்ற சொத்தில் ஒரு கிணறு உள்ளது என்றாலும், அதன் மின் இணைப்பு எண் 481 என்றாலும், அது 4-ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றாலும், ஆமாம்.

1-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

Ending Time: 12.31 P.M.

(ஒப்பம்/- என்.திலகேஸ்வரி)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),
ஆத்தூர்.